# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

# TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# தமிழ்மொழி

## பொதுத்தேர்வு

## 2021

## வளர் தமிழ் 7

சுட்டெண்: | | | | | | | | | |

நேரம்: 150 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

www.tamiledc.com

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ம் முறை | 2ம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 15 | | | |
| 6 | 05 | | | |
| 7 | 20 | | | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | | | |

| | |
|---|---|
| 1ம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ம் முறை - பெயர் / ஒப்பம் | |

1) **தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.**

1. கூறினான் என்பதன் வினையடி

அ ) கூறு ☐ ஆ ) கூறி ☐

இ ) கூறினான் ☐ ஈ ) ஆன் ☐

2. விபுலாநந்த அடிகளின் இயற்பெயர்

அ ) வரதன் ☐ ஆ ) மயில்வாகனன் ☐

இ ) இளங்கோ ☐ ஈ ) சுப்புரத்தினம் ☐

3. நாவரசன் பாடலை இனிமையாகப் பாடினான். இதில் வந்துள்ள அடைமொழி

அ ) நாவரசன் ☐ ஆ ) பாடலை ☐

இ ) பாடினான் ☐ ஈ ) இனிமையாக ☐

4. சவ அடக்கம் செய்யும் மட்பாண்டம்

அ ) ஈமத்தாழி ☐ ஆ ) செம்பு ☐

இ ) குடம் ☐ ஈ ) சட்டி ☐

5. சுட்டெழுத்துகளில் ஒன்று

அ ) ஏ ☐ ஆ ) இ ☐

இ ) ஆ ☐ ஈ ) யா ☐

6. வீணை, வயலின் என்பன

அ ) நரம்புக்கருவிகள் ☐ ஆ ) கஞ்சக்கருவிகள் ☐

இ ) தோற்கருவிகள் ☐ ஈ ) துளைக்கருவிகள் ☐

7. சேனன் குத்திகன் என்ற தமிழ் மன்னர்கள் ஆட்சி செய்த காலம்

அ ) 44 ☐ ஆ ) 34 ☐

இ ) 22 ☐ ஈ ) 20 ☐

8. ஒறுப்பு என்பதன் பொருள்

அ ) தண்டனை ☐ ஆ ) மகிழ்ச்சி ☐

இ ) கொடை ☐ ஈ ) வீரம் ☐

9. மனமுண்டால் இடமுண்டு என்ற பழமொழி கூறும் கருத்து

அ ) குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும். ☐

ஆ ) ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு. ☐

இ ) தீயன செய்தோர் துன்புறுவர். ☐

ஈ ) விரும்பினால் இல்லாதவனும் ஈயலாம். ☐

10. தந்தை என்பதன் எதிர்ப்பாற்சொல்

அ ) இறைவி ☐ ஆ ) தாய் ☐

இ ) அரசி ☐ ஈ ) புலத்தி ☐

11. மின்னிமின்னி என்பது

அ ) இரட்டைக்கிளவி ☐ ஆ ) அடுக்குத்தொடர் ☐

இ ) இணைமொழி ☐ ஈ ) பொதுமொழி ☐

12. மீன்பாடும் தேன் நாடு எனக் கூறப்படும் இடம்

அ ) மட்டுநகர் ☐ ஆ ) திருகோணமலை ☐

இ ) யாழ்ப்பாணம் ☐ ஈ ) மன்னார் ☐

13. மதியின் வரவைக் கண்டு பொங்குவது

அ ) ஆறு ☐ ஆ ) குளம் ☐

இ ) கடல் ☐ ஈ ) ஏரி ☐

14. இலங்கையில் ஈமத்தாழிகள் கண்டெடுக்கப்பட்ட இடம்

அ ) மன்னார் ☐ ஆ ) ஆனையிறவு ☐

இ ) கற்சிலைமடு ☐ ஈ ) குஞ்சுப்பரந்தன் ☐

15. இடைக்கற்காலத்தை ________ என அழைப்பர்.

அ ) சிறியகற்காலம் ☐ ஆ ) பெருங்கற்காலம் ☐

இ ) புதியகற்காலம் ☐ ஈ ) செம்புக்கற்காலம் ☐

16. பூநகரிக்கு நிகராக விளங்கிய தலைநகரம்

அ ) திருகோணமலை ☐ ஆ ) கந்தரோடை ☐

இ ) அநுராதபுரம் ☐ ஈ ) முல்லைத்தீவு ☐

17. பின்வருவனவற்றுள் வேறுபட்ட சொல்

அ ) குதிரை ☐ ஆ ) மா ☐

இ ) கரடி ☐ ஈ ) பரி ☐

18. தமிழுக்குத் தொண்டு செய்த இத்தாலி நாட்டு அறிஞர்

அ ) தோமர் ☐ ஆ ) வீரமாமுனிவர் ☐

இ ) வெர்சில் ☐ ஈ ) சுவைட்சர் ☐

19. போர் + படை

அ ) போர்ப்படை ☐ ஆ ) போர்ப்படைய் ☐

இ ) போர்படைய் ☐ ஈ ) போர்படை ☐

20. கபிலர் பாரிமகளிரைக் காப்பாற்றினார். இதில் வந்துள்ள வேற்றுமை உருபு

அ ) ஆல் ☐ ஆ ) கு ☐

இ ) இல் ☐ ஈ ) ஐ ☐

21. எல்லாளன் அசேலனை வெற்றி கொண்ட நூற்றாண்டு

அ ) கி .மு 203 ☐ ஆ ) கி .மு 202 ☐

இ ) கி .மு 205 ☐ ஈ ) கி .மு 208 ☐

22. சென்றிலன் என்பது

அ ) உடன்பாடு ☐ ஆ ) எதிர்மறை ☐

இ ) வினையெச்சம் ☐ ஈ ) பெயரெச்சம் ☐

23. வானம் கறுத்து மழை பெய்தது. __________ உழவர் விதைப்புக்கு அணியஞ் செய்கின்றனர்.

அ ) எனவே ☐ ஆ ) ஏனெனில் ☐

இ ) ஆனால் ☐ ஈ ) எப்பொழுது ☐

24. அழகான மீன்கள் நீரில் வாழ்கின்றன. இச்சொல்லியத்தில் வேற்றுமை உருபு ஏற்ற சொல்

அ ) அழகான ☐ ஆ ) நீரில் ☐

இ ) மீன்கள் ☐ ஈ ) வாழ்கின்றன ☐

25. எமது தாய்மொழி தமிழ். __________ மிகவும் பழமையானது.

அ ) அவை ☐ ஆ ) அது ☐

இ ) அவர்கள் ☐ ஈ ) இவை ☐

26. ''இட்டுப்பார் உண்டவர்கள் இன்புற்று இருக்கையிலே'' என்ற பாடல் இடம்பெற்ற நூல்

அ ) அழகின்சிரிப்பு ☐ ஆ ) இருண்டவீடு ☐

இ ) குடும்பவிளக்கு ☐ ஈ ) மணிமேகலை ☐

27. வினா எழுத்துகள்

அ ) ஐந்து ☐ ஆ ) எட்டு ☐

இ ) நான்கு ☐ ஈ ) ஆறு ☐

28. சிலப்பதிகாரக் கதை முடிவுற்ற நகரம்

அ ) வஞ்சி ☐ ஆ ) மதுரை ☐

இ ) பூம்புகார் ☐ ஈ ) தகடூர் ☐

29. முத்தமிழின் உறுப்பாக அமைவது

அ ) சிற்பம் ☐ ஆ ) இசை ☐

இ ) நடனம் ☐ ஈ ) ஓவியம் ☐

30. கஞ்சமகள் எனக் குறிப்பிடப்படும் மலர்

அ ) அல்லி ☐ ஆ ) மல்லிகை ☐

இ ) தாமரை ☐ ஈ ) முல்லை ☐

| புள்ளிகள் 30 |
|---|

**2) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.**

இற்றைக்குப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் இலங்கை இந்தியாவுடன் இணைந்தே இருந்தது. குமரிக்கண்டத்தில் ஏற்பட்ட கடற்கோளினால் இலங்கை தனித் தீவானது. அன்றைய காலங்களில் இலங்கையில் இருந்து தமிழகத்தை ஆண்ட மாபெரும்வீரன்தான் இராவணன். அவன் முத்தமிழ் வல்ல பேரறிஞனாகவும் இசைக்கலைஞனாகவும் விளங்கினான். சிவனை வழிபட்ட இராவணன் தன் நாட்டின் அரணுக்காக எல்லைகளில் ஈச்சுரங்களைக் கட்டுவித்தான். இராவணனின் தலைநகரம் பொன்னும் மணியும் கலந்து கட்டப்பட்ட மாடங்களால் நிறைந்து காணப்பட்டது. எந்நேரமும் ஆடலும் பாடலும் நிறைந்து இருந்தன. மக்கள் கல்விகேள்விகளில் சிறந்து விளங்கினர். அக்காலத்தில் உலகிற்கெல்லாம் உணவூட்டுவது போல செந்நெல் விளைந்து குவிந்திருந்தது. இராவணன் ஆட்சிக் காலத்தில் மக்கள் கவலைகள் ஏதும் இன்றி மகிழ்ச்சியாக வாழ்ந்தனர்.

1. இலங்கையிலிருந்து தமிழகத்தை ஆண்ட மாபெரும்வீரன் யார்?

____________________

2. மக்கள் எதில் சிறந்து விளங்கினர்?

____________________

____________________

3. குமரிக்கண்டத்தில் ஏற்பட்ட கடற்கோளினால் எது தனித் தீவானது?

____________________

____________________

4. இராவணன் தன் நாட்டின் அரணுக்காக எல்லைகளில் எவற்றைக் கட்டுவித்தான்?

____________________

5. இராவணன் ஆட்சிக்காலத்தில் மக்கள் எவ்வாறு வாழ்ந்தனர்?

____________________

புள்ளிகள் 10

**3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.**

1. முத்தமிழ் வித்தகர் எனப் போற்றப்படுபவர் யார்?

2. கரிகாற் சோழனால் தமிழகத்தில் கட்டப்பட்ட அணை எது?

3. தீயவருக்குச் செய்த உதவியானது எதைப் போன்று அழிந்துவிடும் என மூதுரையில் கூறப்பட்டுள்ளது.

4. கயிலைவன்னியனுக்கு அஞ்சி போர்த்துக்கேயர் கட்டிய கோட்டைகள் எவை?

5. கதிரவனின் அன்புக்குரிய மலர் எது?

6. போர்க்களத்தில் கொட்டும் முரசின் பெயர் என்ன?

7. உழவர் உழும்போது சேற்றிலிருந்து எவை மேலே மிதக்கின்றன?

புள்ளிகள் 10

4) **தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக எழுதி, கவிதையை முழுமையாக்குக.**

**மட்டக்களப்பு**

| | | | | |
|---|---|---|---|---|
| தென்னை | அழகு | பாடும் | நெய் | வரும் |

மீன் பாடும் நகரம் - காற்று
மிதந்து ____________ நகரம்
தேன் ஓடும் நகரம் - எங்கும்
____________ வளரும் நகரம்

கலை வாழும் நகரம் - தமிழ்க்
கவி ____________ நகரம்
அலைகடல் நகரம் - இயற்கை
____________ மிகு நகரம்

நெல் குவியும் நகரம் - ஆவின்
____________ கமழும் நகரம்
பல்லினமும் வாழும் - எங்கள்
பழந்தமிழர் நகரம்

புள்ளிகள் 10

## 5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. நிகழ்காலச் சொல்லியங்களை இறந்தகாலச் சொல்லியங்களாக மாற்றி எழுதுக.

1. போரினால் மக்கள் வெளியேறுகின்றனர்.

______________________________

2. பூக்களைச் சுற்றி வண்டுகள் பறக்கின்றன.

______________________________

2. 2. பின்வருவனவற்றைச் சேர்த்து எழுதுக.

நீ + உடன் ______________

நாங்கள் + உடன் ______________

அது + உடன் ______________

3. எதிர்ச்சொற்கள் தருக.

நிறைவு ______________

தொடக்கம் ______________

தண்ணீர் ______________

4. ஒவ்வோர் எடுத்துக்காட்டுத் தருக.

வினையெச்சம் ______________

பெயரெச்சம் ______________

வினைமுற்று ______________

5. சொற்புணர்ச்சி எத்தனை வகைப்படும்?

அவை எவை? ______________

______________________________

______________________________

புள்ளிகள் 15

**6) மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.**

1. ஆடிப்பிறப்பன்று எமது ________________ வீட்டிற்கு வந்தனர்.
   ( உறவினர், உரவினர் )

2. கயிலைவன்னியன் ஆங்கிலேயருக்குத் ________________ செலுத்த மறுத்தான்.
   ( திறை, திரை )

3. நேற்று மாலை நாங்கள் கிளித்தட்டு ________________ .
   ( விலையாடினோம், விளையாடினோம் )

4. தமிழுக்குத் ________________ செய்தால் அந்தத் தமிழ் உள்ளளவும் வாழ்வோம்.
   ( தொண்டு, தொன்டு )

5. முதியவர் ________________ மெல்லமெல்ல நடந்து வந்தார்.
   ( ஊன்றுகோளுடன், ஊன்றுகோலுடன் )

| புள்ளிகள் 05 |
|---|

**7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து, 100 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- ✸ தலையைக் காத்த தமிழ்
- ✸ நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம்
- ✸ எனது தாயகம்

புள்ளிகள் 20

TEDC